## குறைந்தபட்ச விலை ரத்து

# வெங்காயம், பாசுமதி அரிசி ஏற்றுமதிக்கு கட்டுப்பாடு நீக்கம்: மத்திய அரசு நடவடிக்கை

புதுடெல்லி, செப்.14–

வெங்காயம் மற்றும் பாசுமதி அரிசி ஏற்றுமதிக்கு கட்டுப்பாட்டை நீக்கி மத்திய அரசு நடவடிக்கை எடுத்து உள்ளது.

உலக அளவில் பாசுமதி அரிசி ஏற்றுமதியில் இந்தியா முன்னணியில் இருக்கிறது. கடந்த நிதியாண்டில் மட்டும் சுமார் ரூ.5 லட்சம் கோடி அளவுக்கு இந்த அரிசி ஏற்றுமதி நடந்து உள்ளது.

அதேநேரம் பாசுமதி ஏற்றுமதிக்காக கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை மத்திய அரசு நிர்ணயித்தது. அதன்படி ஒரு டன் பாசுமதி அரிசிக்கு 1200 அமெரிக்க டாலர் (சுமார் ரூ.1 லட்சம்) என நிர்ணயிக்கப்பட்டது.

இதற்கு ஏற்றுமதியாளர்கள் மற்றும் விவசாயிகள் கவலை வெளியிட்டதால் அக்டோபர் மாதம் இது 950 அமெரிக்க டாலர் (சுமார் ரூ.80,000) என குறைக்கப்பட்டது.

இந்த விலைக்கு ஏற்றுமதி செய்தால் மட்டுமே ஏற்றுமதி பதிவு மற்றும் அனுமதி சான்றிதழ் வழங்கப்பட்டது. இதற்கு குறைவாக பாசுமதியை ஏற்றுமதி செய்ய முடியாதவாறு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

வெங்காயம் ஏற்றுமதிக்கும் டன் ஒன்றுக்கு 550 அமெரிக்க டாலர் (சுமார் ரூ.46,000) என குறைந்தபட்ச ஏற்றுமதி நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. இந்த விலைக்கு குறைவாக வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய முடியாதவாறு கட்டுப்பாடு விதிக்கப்பட்டு இருந்தது.

பாசுமதி அரிசி மற்றும் வெங்காயம் மீதான இந்த ஏற்றுமதி கட்டுப்பாட்டை நீக்குமாறு விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதைத்தொடர்ந்து இந்த குறைந்தபட்ச ஏற்றுமதி விலை கட்டுப்பாட்டை மத்திய அரசு நேற்று நீக்கியது. மத்திய அரசின் இந்த நடவடிக்கை மூலம் ஏற்றுமதி அதிகரிப்பதுடன், விவசாயிகளின் வருவாயும் அதிகரிக்கும் என மத்திய வர்த்தக மந்திரி பியூஸ் கோயல் தெரிவித்து உள்ளார்.

இதைப்போல விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களும் மகிழ்ச்சி தெரிவித்து உள்ளனர்.

இந்தியாவில் பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலங்களில் பாசுமதி அரிசி அதிகமாக விளைவிக்கப்படுகிறது. இதைப்போல வெங்காய உற்பத்தியில் மராட்டிய மாநிலம் முன்னணியில் இருக்கிறது.

அரியானா மற்றும் மராட்டியத்தில் சட்டசபை தேர்தல் நடைபெறும் நிலையில் மத்திய அரசு இந்த முடிவை எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.




# ‘தமிழ்நாட்டில் பி.எச்.டி. படிப்பின் தரம் திருப்தியாக இல்லை': கவர்னர் ஆர்.என்.ரவி வேதனை

சென்னை, செப்.14–

‘தமிழ்நாட்டில் பி.எச்.டி. படிப்பின் தரம் திருப்தியாக இல்லை' என்று கவர்னர் ஆர்.என்.ரவி வேதனையோடு கூறினார்.

தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு 2024 (என்.ஐ.ஆர்.எப்.) தரவரிசையில் தமிழ்நாட்டில் சிறந்து விளங்கிய கல்வி நிறுவனங்களுக்கு பாராட்டு விழாவும், தமிழ்நாட்டின் உயர் கல்வி சிறப்பு குறித்த கருத்தரங்கமும் சென்னை கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகையில் நேற்று காலை நடைபெற்றது.

நிகழ்ச்சியில், கவர்னர் ஆர்.என். ரவி, சென்னை ஐ.ஐ.டி. இயக்குனர் காமகோடி, பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள், பதிவாளர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாட்டில், என்.ஐ.ஆர்.எப். தரவரிசையில் முன்னிலையில் இருந்த 11 உயர் கல்வி நிறுவனங்களை சேர்ந்த நிர்வாகிகளை கவர்னர் ஆர்.என்.ரவி கவுரவித்தார்.

பின்னர், நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:–

நாட்டின் சிறந்த கல்லூரிகளில் முதல் 20 இடங்களை தமிழகத்தைச் சேர்ந்த 28 கல்வி நிறுவனங்கள் தொடர்ச்சியாக பெற்று வருவது பெருமைக்குரியது. இந்த நிகழ்ச்சி தற்போது 3வது முறையாக நடைபெறுகிறது.

இதன் நோக்கம் மாநிலத்தில் இருக்கும் கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் மற்ற கல்வி நிறுவனங்களுடன் கலந்து பணியாற்றாமல் தனியாக செயல்படுவதை மாற்றி, மற்ற கல்லூரிகளுடன் இணைந்து செயல்படுவதற்கு ஊக்குவிப்ப தாகும்.

தமிழகத்தில் ஆராய்ச்சி (பி.எச்.டி) படிப்புக்கான கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும்.

பி.எச்.டி. முடிப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. ஆனால், அதன் தரம் திருப்திகரமாக இல்லை. ஒருசில கல்வி நிறுவனங்களில் மட்டுமே பி.எச்.டி.க்கான கல்வி தரம் சிறப்பாக உள்ளது.

எனவே, அனைத்து கல்வி நிறுவனங்களிலும் பி.எச்.டி. கல்வியின் தரம் உயர்த்தப்பட வேண்டும். முதுநிலை படிக்கும் போதே இளநிலை ஆராய்ச்சி உதவித் தொகை (ஜெ.ஆர்.எப்) மற்றும் ‘நெட்' தேர்வுகளுக்கு தயாராக வேண்டும்.

ஒரு நாடு வளர வேண்டும் என்றால், அந்த நாடு அறிவுசார் சொத்துகளை அமைத்துக்கொள்ள வேண்டும். உலகின் அறிவுசார் சொத்துகளில் சீனா 46 சதவீதம் பெற்றுள்ளது. அதை மனதில் கொண்டு நம் நாட்டின் அறிவுசார் சொத்துகளை உயர்த்துவதற்கு அதிக தரம் கொண்ட பி.எச்.டி. படிப்புகளை கொண்டுவர வேண்டும்.

கடந்த 2 ஆண்டுகளில் கல்வி நிறுவனங்களின் செயல்பாடுகள் உயர்ந்துள்ளது. மேலும், அறிவுசார் சொத்துகளையும் உருவாக்கி உள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

# கடந்த ஆண்டில் மட்டும் தமிழகத்தில் 83½ லட்சம் பேருக்கு பாஸ்போர்ட் வினியோகம்

சென்னை, செப்.14–

தமிழகத்தில் கடந்த ஆண்டு மட்டும் 83 லட்சத்து 55 ஆயிரம் பேருக்கு பாஸ்போர்ட் வினியோகிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டுக்கு செல்வதற்கு பாஸ்போர்ட் அவசியம் ஆகும். பாஸ்போர்ட் இல்லாமல் செல்பவர்கள் சட்டவிரோதமாக குடியேறியவர்களாக கருதப்படுகிறார்கள்.

வேலை, படிப்பு மற்றும் சுற்றுலா என பல்வேறு தேவைகளுக்காக இந்தியர்கள் நமது நாட்டில் இருந்து வெளிநாடுகளுக்கு பறந்து வருகிறார்கள். இதனால் பாஸ்போர்ட் விண்ணப்பித்து பெற்று வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

அந்த வகையில், கடந்த 2023ம் ஆண்டு மட்டும் 3 கோடியே 8 லட்சத்து 93 ஆயிரத்து 577 பெண்கள், 5 கோடியே 73 லட்சத்து 77 ஆயிரத்து 716 ஆண்கள் என மொத்தம் 8 கோடியே 82 லட்சத்து 71 ஆயிரத்து 293 பேர் பாஸ்போர்ட் பெற்றுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

அதிக பாஸ்போர்ட் வினியோகிக்கப்பட்ட மாநிலங்களில் கேரளா முதல் இடத்தில் உள்ளது. அங்கு 42 லட்சத்து 17 ஆயிரத்து 661 பெண்கள், 56 லட்சத்து 75 ஆயிரத்து 179 ஆண்கள் என 98 லட்சத்து 92 ஆயிரத்து 840 பேருக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு அடுத்தபடியாக மராட்டியத்தில் 40 லட்சத்து 75 ஆயிரத்து 512 பெண்கள், 57 லட்சத்து 35 ஆயிரத்து 854 ஆண்கள் என 98 லட்சத்து 11 ஆயிரத்து 366 பேருக்கும், உத்தரபிரதேசத்தில் 17 லட்சத்து 27 ஆயிரத்து 89 பெண்கள், 70 லட்சத்து 58 ஆயிரத்து 703 ஆண்கள் என 87 லட்சத்து 85 ஆயிரத்து 792 பேருக்கு பாஸ்போர்ட் வழங்கப்பட்டுள்ளது.

அதிக பாஸ்போர்ட் வினியோகிக்கப்பட்ட பட்டியலில் தமிழகம் 4ம் இடத்தில் உள்ளது. தமிழகத்தில் 28 லட்சத்து 7 ஆயிரத்து 509 பெண்கள், 55 லட்சத்து 47 ஆயிரத்து 383 ஆண்கள் என 83 லட்சத்து 54 ஆயிரத்து 892 பேர் பாஸ்போர்ட் பெற்றிருக்கிறார்கள்.

## கடந்த 10 ஆண்டுகளில் ரூ.2 லட்சம் கோடியில் புதிய சாலைகள்

# தேசிய நெடுஞ்சாலை பணியில் தமிழகம் நம்பர் 1: மத்திய அமைச்சர் நிதின் கட்காரி பாராட்டு

கும்பகோணம், செப்.14–

தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளில் ரூ.2 லட்சம் கோடியில் புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன என்று மத்திய அமைச்சர் நிதின் கட்காரி கூறினார்.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி முதல் தஞ்சாவூர் வரை தேசிய நெடுஞ்சாலை பணிகள் தற்போது முடியும் தருவாயில் உள்ளது. இந்த பணிகளை மத்திய நெடுஞ்சாலை மற்றும் சாலை போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்காரி நேற்று கும்பகோணத்தில் ஆய்வு செய்தார். கும்பகோணம் மூப்பக்கோவில் புறவழிச்சாலையில் சாலை வரைபடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்த அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

தஞ்சை–விக்கிரவாண்டி தேசிய நெடுஞ்சாலை ரூ.4,730 கோடியில் 164 கி.மீ தூரத்துக்கு அமைக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர்–சோழபுரம், சோழபுரம்–சேத்தியாதோப்பு வரையிலான சாலைப் பணிகள் 95 சதவீத நிறைவு பெற்றுள்ளது.

ஆந்திர – தமிழக எல்லையில் ரூ.15 ஆயிரம் கோடியில், ராணிப்பேட்டை –சென்னை சாலையை விரிவாக்கம் செய்வதன் மூலம், சென்னை, பெங்களூரு, ஆந்திரா இடையிலான கனரக வாகன போக்குவரத்து நெரிசல் குறையும். தற்போது 10 புதிய சாலைகள் 727 கி.மீ. தூரத்துக்கு ரூ.20 ஆயிரம் கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் அமைக்கப்பட உள்ளது. இதற்கான தனிச் சாலை அமைக்க பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ரூ.1 லட்சம் கோடியில், 2,781 கி.மீட்டர் தூரத்துக்கு புதியதாக 71 சாலைகள் அமைக்கும் திட்டம் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளது. தமிழகத்தில் 2014ம் ஆண்டு முதல் 2024ம் ஆண்டு வரை 451 பல்வேறு புதிய சாலைத் திட்டங்கள் 9,300 கி.மீ. தூரத்துக்கு ரூ.2 லட்சம் கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது. 2014ம் ஆண்டுக்கு முன்பாக 4,975 தேசிய நெடுஞ்சாலைகள் இருந்தன. 2014ம் ஆண்டுக்கு பிறகு தேசிய நெஞ்சாலைகள் 6,806 சாலையாக உயர்ந்துள்ளது.

நாடு முழுவதும் ரூ.5 லட்சம் கோடியில் 10 ஆயிரம் கி.மீ. தூரத்துக்கு 27 புதிய பசுமை வழிச்சாலை அமைய உள்ளது. தமிழகத்தில் 3 பசுமை வழிச்சாலை, 187 கி.மீ., தூரத்தில் ரூ.10 ஆயிரத்து 100 கோடி செலவில் அமைய உள்ளது. தமிழகத்துக்கு மேலும், ரூ.1 லட்சம் கோடி செலவு செய்ய தயாராக உள்ளோம்.

தமிழக அரசு நிலம் கையகப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். இந்தியாவிலேயே, தேசிய நெடுஞ்சாலை பணியில், தமிழகம் நம்பர் 1ஆக உள்ளது. மேலும், தமிழகத்தின் பங்களிப்பு நல்லப்படியாக உள்ளது. இவ்வாறு நிதின் கட்காரி கூறினார்.

## மழைக்காலங்களில் வெள்ளம் ஏற்படுவதை தடுக்க

# வேளச்சேரி ஏரி ரூ.23½ கோடியில் தூர்வாரப்படுகிறது: பசுமை தீர்ப்பாயத்தில் கலெக்டர் அறிக்கை தாக்கல்

சென்னை, செப்.14–

சென்னை வேளச்சேரி ஏரி ஆக்கிரமிப்பு மற்றும் ஏரியில் கழிவு நீர் கலப்பது தொடர்பான விவகாரத்தை சென்னையில் உள்ள தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயம் தாமாக முன்வந்து வழக்காக எடுத்து விசாரித்து வருகிறது.

அதேவேளையில் வேளச்சேரி ஏரி பாதுகாப்பு இயக்கத்தின் துணை தலைவர் குமரதாசன் என்பவரும் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

வழக்கை விசாரித்த தீர்ப்பாயம், வேளச்சேரி ஏரியை ஆய்வு செய்து ஆக்கிரமிப்புகளை அகற்றவும், கழிவுநீர் கலப்பதை தடுக்கவும் எடுத்த நடவடிக்கை குறித்து சென்னை கலெக்டர் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டது.

இந்த நிலையில் அந்த வழக்கு தீர்ப்பாயத்தில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது சென்னை கலெக்டர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில்,

“மழை காலங்களில் வெள்ளம் ஏற்படுவதை தடுக்க வேளச்சேரி ஏரியை ரூ.23½ கோடியில் புதுப்பிக்க சி.எம்.டி.ஏ. திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் ஏரி தூர்வாரப்பட்டு தற்போது இருப்பதை விட கூடுதலாக 22 சதவீத அளவு தண்ணீரை சேமிக்க முடியும்.

வேளச்சேரி ஏரியை பல்வேறு திட்டங்கள் மூலம் குடிநீர் ஆதாரமாக உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது” என கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை படித்து பார்த்த தீர்ப்பாய நீதிபதி, தமிழக அரசின் முயற்சிக்கு பாராட்டு தெரிவித்தார்.

பின்னர் தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவில், “மழைக்காலங்களில் வேளச்சேரியில் வெள்ளம் ஏற்படுவதை தடுக்க வேளச்சேரி ஏரியை சுற்றி உள்ள ஆதம்பாக்கம், மடிப்பாக்கம், கீழ்கட்டளை, நாராயணபுரம், பள்ளிக்கரணை ஆகிய 5 ஏரிகளையும் தூர்வாரலாம். இதுதொடர்பாக நீர்வளத்துறை, வனத்துறை ஆய்வு அடுத்த விசாரணையின் போது அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்” என கூறப்பட்டுள்ளது.

# அந்தமான் தலைநகர் ‘ஸ்ரீ விஜயபுரம்’ என மாற்றம்

புதுடெல்லி, செப்.14–

அந்தமான் தலைநகர் போர்ட் பிளேரின் பெயர் ‘ஸ்ரீ விஜயபுரம்’ என மாற்றப்பட்டு உள்ளதாக உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறினார்.

அந்தமான் நிகோபார் தீவுக்கூட்டத்தை யூனியன் பிரதேசமாக வகைப்படுத்தி மத்திய அரசே நேரடியாக நிர்வகித்து வருகிறது. இந்த யூனியன் பிரதேசத்தின் தலைநகராக போர்ட் பிளேர் இருக்கிறது. இந்த போர்ட் பிளேரின் பெயரை ‘ஸ்ரீ விஜயபுரம்’ என மத்திய அரசு மாற்றி உள்ளது. இந்த தகவலை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் கூறியிருப்பதாவது:–

காலனி ஆதிக்க முத்திரைகளில் இருந்து நாட்டை விடுவிக்கும் பிரதமர் மோடியின் தொலைநோக்குப் பார்வையால் ஈர்க்கப்பட்டு, போர்ட் பிளேரின் பெயரை ‘ஸ்ரீ விஜயபுரம்’ என மாற்ற முடிவு செய்துள்ளோம்.

முந்தைய பெயர் (போர்ட் பிளேர்) ஒரு காலனித்துவ மரபாக இருந்த நிலையில், இந்திய சுதந்திர போராட்ட வெற்றியை ‘ஸ்ரீ விஜயபுரம்’ அடையாளப்படுத்துகிறது.

இந்த போராட்டத்தில் அந்தமான் நிகோபாருக்கு தனித்துவமான பங்களிப்பு இருந்தது.

இந்திய விடுதலை போராட்டத்திலும், வரலாற்றிலும் அந்தமான்நிகோபார் தீவுக்கூட்டங்கள் ஒரு இணையற்ற இடத்தை பெற்று உள்ளன. ஒருகாலத்தில் சோழப்பேரரசின் கடற்படை தளமாக செயல்பட்ட அந்த தீவு பிராந்தியம், தற்போது இந்தியாவின் மூலோபாய மற்றும் மேம்பாட்டு விருப்பங்களுக்கான முக்கியமான தளமாக உள்ளது,

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இங்குதான் நமது மூவர்ணக்கொடியை முதன்முதலில் ஏற்றி வைத்தார். ஒரு சுதந்திர தேசத்துக்காக பாடுபட்ட வீர சாவர்க்கர் மற்றும் பிற சுதந்திர போராட்ட வீரர்கள் அங்குள்ள சிறையில்தான் அடைக்கப்பட்டு இருந்தனர். இவ்வாறு அமித்ஷா கூறியுள்ளார்.

# சீனாவில் அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் வயது அதிகரிப்பு: ஆண்கள் – 63; பெண்கள் – 58

பீஜிங், செப்.14–

சீனாவில் அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் வயது வரம்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் கடந்த சில ஆண்டுகளாக மக்கள் தொகை சரிந்து வருகிறது. அதே வேளையில் அங்கு வயதானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அங்கு 5ல் ஒருவர் 60 வயதுக்கு மேற்பட்டவராக உள்ளார்.

கடந்த 1949ல் 36 ஆண்டுகளாக இருந்த சீனர்களின் சராசரி ஆயுள் தற்போது 78 ஆண்டுகளாக அதிகரித்துள்ளது.

ஆனால் கடந்த 75 ஆண்டுகளில் அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் வயது ஆண்களுக்கு 60, பெண்களுக்கு 55 (உடல் உழைப்பு தொழில்களுக்கு 50) என்ற நிலையில் மாற்றமில்லை.

இதனால் அங்கு ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருகிறது. இது அந்த நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வந்தது.

இந்த நிலையில் ஓய்வு பெறும் வயது வரம்பை சீன அரசு உயர்த்தியுள்ளது.

அதன்படி ஆண்களுக்கு ஓய்வு பெறும் வயது 60ல் இருந்து 63 ஆகவும், பெண்களுக்கு 55ல் இருந்து 58 ஆகவும் உயர்த்தப் பட்டுள்ளது.

அதே போல் உடல் உழைப்பு தொழில்களில் ஈடுபடும் பெண்களுக்கு ஓய்வு பெறும் வயது 50ல் இருந்து 55 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. இந்த புதிய கொள்கை அடுத்த ஆண்டு ஜனவரி முதல் அமலுக்கு வரும் எனவும், அடுத்த 15 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.


**ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.**

பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025

CIN : U65900DL2020PLC366027

**ஏல அறிவிப்பு**

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி 25.09.2024 அன்று மாலை 3:00 மணிக்கு கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் ஏலத்தில் பங்கேற்கலாம்.

| கிளை | கணக்கு எண் | கணக்கு வைத்திருப்பவர் பெயர் | தந்தை/ மனைவி/கணவன் பெயர் | முகவரி | கணக்கு துவக்க தேதி | செலுத்த வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|---|
| சென்னை | 104142510561 | ஸ்ரவந்தி | C/O பாபு | 26 குறவன் குளம் 2வது சந்து, சூளை, சென்னை, தமிழ்நாடு 600112 | 26/04/2024 | 207287.76 |
| சென்னை | 104142510578 | ராபின்சன் சிவதாசன் | S/o. சிவதாசன் கே, | எண்: 10/6, திருவள்ளுவர் தெரு வேளச்சேரி, தண்டீஸ்வரம் தெரு, சென்னை, தமிழ்நாடு 600042 | 30/04/2024 | 203436.52 |
| சென்னை | 104142510051 | ஷீனா பாலேந்திரன் | S/o. பாலேந்திரன் | 9/3, 3வது தெரு, பவானி நகர், பொழிச்சலூர், காஞ்சிபுரம், தமிழ்நாடு 600074 | 04/01/2024 | 736813.11 |
| சென்னை | 104142510180 | ஜெய்கணேஷ் எம் | S/o. மாரியப்பன் | மநைன எண் 333, எஸ்.எப். எண். 321/1, அம்பத்தூர் கூட்டுறவு நகர், அயப்பாக்கம், கிரீன் கார்டன் திருவள்ளூர், தமிழ்நாடு 600077 | 02/02/2024 | 209822.45 |
| சென்னை | 104142510227 | பராஸ் ஏ எஸ் | S/o. சலீம் அக்தர் ஜி | 20/68, தரை தளம் அஷ்கானா தெரு, ஆலந்தூர், காஞ்சிபுரம், தமிழ்நாடு 600016 | 13/02/2024 | 126116.72 |
| சென்னை | 104142510414 | ஆர்த்தி சி | S/o. சின்னையன் | எண்.110B, புதிய எண் 1/4 பிளாக், ஆலிவலம் அஞ்சல் பிள்ளையார் கோவில், ஆலிவலம் அருகில், தஞ்சாவூர், தமிழ்நாடு 614602 | 26/03/2024 | 39995.54 |
| சென்னை | 104142510536 | அர்ஜுன் வி எம் | S/o. முருகேசன் | 11ஏ, 1வது குறுக்குத் தெரு ராஜரத்தினம் நகர் திருவேற்காடு, அயப்பாக்கம், திருவள்ளூர், தமிழ்நாடு 600077 | 22/04/2024 | 183948.36 |
| சென்னை | 104142510539 | பி பிரகாஷ் | S/o. பழனிசாமி | எல்ஐஜி மனை எண்.42, பிளாக் 53, 40வது தெரு, இடையஞ்சாவடி அய்யா கோயில்அருகில், மணலி, மணலி நியூ டவுன், திருவள்ளூர் தமிழ்நாடு 600103 | 22/04/2024 | 773351.30 |
| சென்னை | 104142510552 | அசோக் ராஜ் | S/o. காத்தவராயன் | எண்.24/55, 86வது தெரு, அசோக் நகர், சென்னை, தமிழ்நாடு 600083 | 25/04/2024 | 114514.75 |
| சென்னை | 104142510553 | ஆர் பிரமா | S/o. ராஜன் | 9/4, சோலை 2வது தெரு அயனாபுரம், சென்னை, தமிழ்நாடு 600023 | 25/04/2024 | 68299.67 |
| சென்னை | 104142510556 | எஸ் சிவநேசன் | S/o. சங்கரலிங்கம் | 3–3A, வடக்கு தெரு பரிக்கல், உளுந்தூர்பேட்டை தாலுக்கா, விழுப்புரம், தமிழ்நாடு 607204 | 25/04/2024 | 54117.25 |
| சென்னை | 104142510572 | கே ஜவஹர் | S/o. கிருஷ்ணமூர்த்தி | எண் 5, செயின்ட் பால் தெரு லீபனோன்புரம், கொடுங்கையூர், எருக்கஞ்சேரி, சென்னை, தமிழ்நாடு 600118 | 29/04/2024 | 142691.65 |
| சென்னை | 104142510576 | ஷெர்லின் ராபின்சன் | S/o. ராபின்சன் எஸ். | எண் 10/6, திருவள்ளுவர் தெரு, வேளச்சேரி, தண்டீஸ்வரம் விரிவாக்கம் சென்னை தமிழ்நாடு 600042 | 30/04/2024 | 169781.33 |
| சென்னை | 104142510581 | ஆபிரகாம் சார்லஸ் | S/o. மார்ட்டின் தேவகன் | 3/5, பரசுராமன் தெரு, காந்தி சாலை, ரேஷன் எதிரில், கடை வேளச்சேரி சென்னை தமிழ்நாடு 600042 | 02/05/2024 | 84741.06 |
| சென்னை | 104142510678 | எம் ஏ சாமி | S/o. மாரேஸ்வரன் | எண் 32 அண்ணா தெரு, பக்தவத்சலபுரம் மீனாட்சி சினிமாஸ் ஆவடி, ஆவடி திருவள்ளூர் திருவள்ளூர் தமிழ்நாடு 600054 | 25/05/2024 | 79077.27 |
| சென்னை | 104142510692 | ரேஷ்மா வி | S/o. வீரபத்திரன் | 2/13A, கோபால் தெரு ஜாபர்கான்பேட்டை அசோக் நகர், சென்னை சென்னை தமிழ்நாடு 600083 | 29/05/2024 | 53170.02 |

**ஏல தேதி 25.09.2024 அன்று மாலை 3.00 மணி**

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.**



VASTU HOUSING FINANCE

**வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**

யூனிட் எண். 203 & 204, 2வது தளம், ஏ விங், நவ்பாரத் எஸ்டேட், ஜக்காரியா பண்டர் மார்க் சாலை செவ்ரி (மேற்கு), மும்பை 400 015, மகாராஷ்டிரா

CIN No.: U65922MH2005PLC272501

**சுவாதீனம் எடுத்த அறிவிப்பு (அசையா சொத்து)**

கீழே கையொப்பமிட்டுள்ள **வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 9வது விதிமுறைக்கு ஏற்பவும் 17 பிப்ரவரி 2024 தேதியிட்ட டிமாண்ட் நோட்டீசை வெளியிட்டது. **திரு/திருமதி.அருண்பிரசாத் எல் (விண்ணப்பதாரர்), திரு/திருமதி.முத்துலட்சுமி அருண்பிரசாத் (உடன் விண்ணப்பதாரர்),** கடன் கணக்கு எண். LP0000000133580 ஆகியோரை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி 14 பிப்ரவரி 2024 அன்று வரை செலுத்த வேண்டிய தொகை **ரூ.455508/- (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பத்தைந்து ஆயிரத்து ஐந்நூற்று எட்டு மட்டும்)** மற்றும் மேலும் மேற்சொன்ன டிமாண்ட் நோட்டீஸ் தேதியிலிருந்து முழு தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த அறுபது (60) நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

கடன்தாரர்கள் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால், கடன்தாரர், உத்தரவாததாரர் மற்றும் பொது மக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப்பிரிவு 13 (4)ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிகளின் 9வது விதிமுறைக்கு இணங்கவும், 09 **செப்டம்பர் 2024** அன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டார்.

கடன்தாரர் மற்றும் உத்தரவாததாரர்கள் குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் சொத்துக்களைக் கையாள வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகிறார்கள், மேலும் கூறப்பட்ட சொத்துக்கள் **வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டிற்கு (திருப்பூ கிளை)** செலுத்த வேண்டிய தொகை **ரூ.455508/- (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பத்தைந்து ஆயிரத்து ஐந்நூற்று எட்டு மட்டும்)** மற்றும் மேலும் வட்டி மற்றும் செலவுகளுக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித கையாளுலும் மேற்கொள்ள வேண்டாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**அசையா சொத்துக்கள் விவரம்**

கதவு எண் 3/16 நத்தம் எஸ்.எப்.எண்.104/36 வார்டு எண் 3 பட்டா எண் 601, கரடிகூடம் நெய்காரப்பட்டி கிராமம் மற்றும் டவுன் பஞ்சாயத்து, பழனி, திண்டுக்கல், தமிழ்நாடு, 624621, விஸ்தீரணம் 80 சதுர மீட்டர்.

**தேதி** : 14.09.2024
**இடம் : திருப்பூர்**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**



**படிவம் எண்.URC-2**

**சட்டத்தின் XXI அத்தியாயத்தின் பகுதி I-ன் கீழ் பதிவு பற்றியஅறிவிப்புஅளிக்கும் விளம்பரம் (நிறுவனங்கள் சட்டம் 2013 விதி பிரிவு 374(பி) மற்றும் நிறுவனங்கள் (பதிவு அதிகாரம்) விதிகள் 2014ன் கீழ் விதி 4(1)ன்படி)**

1.நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 366 மற்றும் உபபிரிவு (2)ன்கீழ், இதிலிருந்து பதினைந்து நாட்களுக்கு பின்னர் ஆனால் முப்பது நாட்கள் முடிவதற்குள்ளாக பதிவாளர், சென்னை, தமிழ்நாடு, அவர்களுக்கு விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. அதன்படி, Kcaltech System India LLP என்ற வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டாண்மை (LLP), நிறுவனங்கள் சட்டம் 2013, அத்தியாயம் XXI, பகுதி 1 என் கீழ் பங்குகளால் வரையறுக்கப்பட்ட ஒரு நிறுவனமாக பதிவு செய்யப்படலாம்.

2.திட்டமிடப்பட்டுள்ள நிறுவனத்தின் முக்கிய கொள்கைகள் பின்வருமாறு:

a.உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், டீலர்கள், வர்த்தகர்கள், வாங்குவோர், விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள், மொத்த விற்பனையாளர்கள், வாகனங்களுக்கான அலுமினிய வெளியேற்றப் பொருட்களின் சப்ளையர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள், வீட்டுக் காற்றுச்சீரமைப்பிகள், அலுமினிய போர்ஜிங் தயாரிப்புகள், அலுமினிய கேபிள் பொருட்கள், இயந்திரங்கள், இயந்திர பாகங்கள் ஆகியவை தொடர்பான கருவிகள், வெப்பப் பரிமாற்றி மின்தேக்கி, குழாய்கள், சேவை உபகரணங்கள் மற்றும் தொடர்புடைய பாகங்கள், பொருட்கள், கருவிகள் போன்றவை.

3.திட்டமிடப்பட்டுள்ள நிறுவனத்தின் மெமோரண்டம் மற்றும் ஆர்டிகிள்ஸ் ஆப் அசோசியேஷன் நகலை அலுவலகத்தில், பிளாட் எண்.11, கூடலூர் இண்டஸ்ட்ரியல் ஏரியா III, மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா, 603 209 என்ற முகவரியில் பார்வையிடலாம்.

4.இந்த விண்ணப்பம் மீது எவருக்கேனும் ஆட்சேபம் இருப்பின், அவர்களது ஆட்சேபத்தை மத்திய பதிவு மையம் (சிஆர்சி), கார்ப்பரேட் விவகாரங்களுக்கான இந்திய நிறுவனம் (IICA), மனை எண். 6, 7, 8, செக்டார் 5, ஐஎம்டி, மானேசர், குர்கான் மாவட்டம் (ஹரியானா), பின்கோடு - 122050 அவர்களுக்கு இந்த அறிவிப்பு வெளியான இருபத்தோரு நாட்களுக்குள் எழுத்துப் பூர்வமாக அனுப்பவேண்டும். அதன் நகல் ஒன்றை நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

13 செப்டெம்பர் 2024 அன்று தேதியிடப்பட்டது

**விண்ணப்பதாரரின் பெயர்(கள்):**
For Kcaltech System India LLP
**யோங் மேன் சோ & யோன் ஜெய் சோய்**
**நியமிக்கப்பட்ட பங்குதாரர்**